காரைக்கால் நகராட்சி
காரைக்கால்
******

எண்:29-4/கா.ந/D4/வேலை/2009-10 தேதி:25.05.09

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

காரைக்கால் நகரசபை சார்பாக அரசுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்கண்ட வேலைகளுக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது. புதுச்சேரி பொதுப்பணித்துறை, மத்திய பொதுப்பணித்துறை, இராணுவ பொறியியல் பணி, இரயில்வே மற்றும் பிற மாநில பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் இந்த ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள தகுதி வாய்ந்தவர்களாவர். மேலும் புதுச்சேரி பொதுப்பணித்துறையில் பதிவு செய்யாத ஒப்பந்ததாரர்கள் கடந்த ஐந்து வருடங்களில் அட்டவணை 6-ல் குறிப்பிட்டுள்ள வகுப்பில் மூன்று வேலைகள் 30% குறையாமல் திருப்திகரமான முறையில் முடித்ததற்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

| வ. எண். | வேலையின் பெயர் | உத்தேச மதிப்பீட்டுத் தொகை | முன் வைப்புத் தொகை | ஒப்பந்தப் படிவத்தின் விலை மற்றும் 4% VAT வரி(திரும்ப பெற இயலாது | ஒப்பந்ததாரரின் வகுப்பு | ஒப்பந்தக் காலம் மழை காலம் உட்பட |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | காரைக்கால் M.M.G. நகர் M.O.H. பாருக் சாலை அபிவிருத்தி செய்தல். | 14,87,564/- | 29,760/- | 500/- (+)VAT@4% | வகுப்பு 4 மற்றும் அதற்கு மேல் | 5 மாதம் |
| 2. | காரைக்கால் நகராட்சி திருமணமண்டபம் அபிவிருத்தி செய்தல். | 13,08,271/- | 26,170/- | 500/- (+)VAT@4% | வகுப்பு 4 மற்றும் அதற்கு மேல் | 6 மாதம் |
| 3. | காரைக்கால் பிரெஞ்சு ஆசிரியர் வீதி, திருநகர் பேட்டிலிருந்து காமராஜ் சாலை வரை அபிவிருத்தி செய்தல் | 13,28,430/- | 26,570/- | 500/- (+)VAT@4% | வகுப்பு 4 மற்றும் அதற்கு மேல் | 5 மாதம் |
| 4. | காரைக்கால் தலத்தெரு புதிய LGR லே அவுட் (முரசொலி நகர்) உள் சாலைகள் அமைத்தல் | 14,13,605/- | 28,480/- | 500/- (+)VAT@4% | வகுப்பு 4 மற்றும் அதற்கு மேல் | 6 மாதம் |
| 5. | உள் சாலைகள் அபிவிருத்தி - கருங்கல் ஜல்லி, தார் சாலை, தடுப்புச் சுவர் அமைத்தல், து.வே: முல்லையார் பாலத்திலிருந்து அக்கரைவட்டம் செல்லும் சாலைக்கு தடுப்புச்சுவர் கட்டுதல். | 21,79,829/- | 43,600/- | 500/- (+)VAT@4% | வகுப்பு 4 மற்றும் அதற்கு மேல் | 8 மாதம் |

1. ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரும் கடைசி தேதி மற்றும் நேரம் : 12.06.09 அன்று மாலை 4.00 மணி வரை

2. ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கப்படும் கடைசி தேதி மற்றும் நேரம் : 16.06.09 அன்று மாலை 4.00 மணி வரை

3. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் கடைசி தேதி மற்றும் நேரம் : 18.06.09 அன்று மாலை 3.30 மணி வரை

4. ஒப்பந்தப்புள்ளி திறக்கும் கடைசி தேதி மற்றும் நேரம் : 18.06.09 அன்று மாலை 4.00 மணிக்கு

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் ஆணையர், காரைக்கால் நகராட்சி, காரைக்கால் அவர்களால் மேலே குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

2. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளை ஆணையர், காரைக்கால் நகராட்சி அலுவலகத்தில் அட்டவணை 5-ல் குறிப்பிட்டுள்ளபடி தொகையை (VAT வரி 4% உள்பட) பணமாக (திரும்ப பெற இயலாது) ஒவ்வொரு வேலைக்கும் செலுத்தி மற்றும் அட்டவணை 4-ல் குறிப்பிட்டுள்ளபடி முன் வைப்புத் தொகையையும் கிழே குறிப்பிட்டுள்ள முறைபடி செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

3. முன்வைப்பு தொகையை கருவூலம் செலான் ரசீதாகவே/அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கியின் கால் டெப்பாசிட் ரசீதாகவோ/ அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கியின் பிக்ஸடு டெபாசிட் ரசீதாகவோ/ அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கியின் வரைவோலையாகவோ ஒப்பந்தப்புள்ளி படிவங்களை கோரும் விண்ணப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். முன்வைப்பு தொகையை ஆணையர், காரைக்கால் நகராட்சி, காரைக்கால் பெயருக்கு செலுத்தப்பட வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளி பிரிக்கப்படும் நாள் பொது விடுமுறையாக இருப்பின் அடுத்த வேலை நாளில் பிரிக்கப்படும்.

5. வேலைக்கான காலம் மழைக்காலத்தையும் உட்படுத்தப்பட்டது. மேலும் வேலை உத்தரவு வழங்கிய தேதியிலிருந்து 10-வது நாள் பணி தொடங்கப்பட வேண்டும்.

6. முன்வைப்புத் தொகையை மேலே குறிப்பிட்ட வண்ணம் செலுத்தாத ஒப்பந்ததரார்களின் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

7.காரைக்கால் நகரசபைக்கு எந்தவொரு ஒப்பந்தப்புள்ளியையும் நிராகரிக்க உரிமை உண்டு.

8. குறிப்பு : மேற்கண்ட வேலைக்கான ஒப்பந்தப்படிவத்தை **www.karaikal.gov.in** என்னும் இணையதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இணையதளத்திலிருந்து பெற்றுக்கொண்டு பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்படிவம், நிபந்தனை, தகுதியுடைய ஒப்பந்த பதிவு உரிமம் மற்றும் தற்போது செய்துகொண்டிருக்கும் வேலைகள் பற்றிய விபரம் ஒரு உரையிலும், ஒப்பந்தப்படிவத் தொகைக்கான டிமாண்ட் டிராப்டினை ஒரு உரையிலும், முன்வைப்புத் தொகையினை ஒரு உரையிலும் வைத்து அரக்கு முத்திரையிட்டு இம்மூன்றினையும் ஒரு உரையில் வைத்து 24.06.08 அன்று மாலை 3.30 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். உரையின் முகப்பில் ஒப்பந்தப்படிவத் தொகை, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்படிவம் என்று தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

ஆணையர்
காரைக்கால் நகராட்சி

**பிறப்பு/ இறப்பு பதியப்படுதல் அவசியம்**
**நகராட்சி வரி அனைத்தையும் கால தாமதமின்றி செலுத்தவும்**
**கால்நடைகளை சாலைகளில் திரியவிடாமல் விபத்துக்களை தவிர்க்கவும்**